செ.வெ.எண்:20 நாள்:21.04.2020

**பத்திரிக்கை செய்தி**

கோவிட்-19 வைரஸ் நோய் தொற்று பரவுதலை தடுப்பதற்காக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகள் (இதய நோய், சிறுநீரக நோய், காசநோய், பக்கவாதம், நுரையீரல் மற்றும் கல்லீரல் சம்பந்தமான நோய், புற்று நோய், நீரழிவு நோய், இரத்த அழுத்தம்) தேவைப்படும் மூத்த குடிமக்களின் பராமரிப்பாளர்களுக்கு பாஸ் வழங்கப்பட உள்ளது. எனவே நீலகிரி மாவட்டத்தில் மேற்படி பராமரிப்பாளர்களுக்கு பாஸ் பெற விரும்பும் மூத்த் குடிமக்கள் தனது கோரிக்கைகளை கீழ்க்காணும் ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம், பிங்கர்போஸ்ட், உதகையில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**பாஸ் பெற தேவைப்படும் ஆவணங்கள்**

1. விண்ணப்பதாரரின் புகைப்படம் 2-நகல்
2. விண்ணப்பதாரரின் ஏதேனும் ஒரு அடையாள அட்டை
3. பராமரிப்பாளரின் ஏதேனும் ஒரு அடையாள அட்டை

ஒப்பம்/-***
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

/உண்மை நகல் உத்தரவுப்படி/

மாவட்ட சமூகநல அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

21-4-2020